# ஹொரொவபொத்தான பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 08 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 19 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹொரொவபொத்தான பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 12 வர்த்தக நிலையங்களை ரூபா 3,098,600 இற்கு வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் வாடகை வருமானம் ரூபா 2,331,226 தொகை என காட்டப்பட்டிருந்தமையால், ரூபா 767,334 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 10,218,160 இற்கான 03 வாகனங்களின் பெறுமதி மற்றும் பெறுமதியினை உறுதிப்படுத்தாத 02 வாகனங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்தை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆண்டின் போது உடன்படிக்கைகள் கையொப்பமிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரை அவ் உடன்படிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காத 23 நிர்மாண வேலைகளின் ரூபா 13,939,312 இற்காக உடன்பட்டிருந்த பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் நிர்மாண வேலை கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள் என காட்டப்பட்டிருந்தது.

(உ) 2003 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப் பகுதியில் கேள்விகள் சமர்ப்பித்திருந்தும் நிராகரிக்கப்பட்டிருந்த கேள்விதாரர்கள் 20 பேர் சமர்ப்பித்திருந்த ரூபா 1,134,000 இற்கான கேள்வி பிணை வைப்புக்களை வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 91,774,614 இற்கான 12 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விடயங்கள் தொடர்பாக உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் / உளமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்/ விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 1,071,841 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 78,947 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வீத வரி

---------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பகுதிகளாக வெளியிடப்பட்ட அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆதனங்களின் வருடாந்த மதிப்பீட்டின் மீது வீத வரி விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

-----------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 1,373,330 இற்கான நிலுவை கடை வாடகையினை குறிப்பிட்ட நபர்கள் காணப்படாமையால் அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது.

2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

--------------------------------------------------

இனங்காணப்படாத காலப் பகுதி ஒன்று முதல் அதிகாரப் பிரதேசத்தில் 284 வர்த்தக நிறுவனங்களில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 1,043,750 ஆக காணப்பட்டதுடன், இந்த வர்த்தக நிறுவனங்களில் தற்போது உளமை உறுதிப்படுத்தபட்டமையால், நிலுவை தொகையினை அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

(அ) உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 3 இன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான காணிகளின் உரிமை சபையின் பேரில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இலக்கம் PL/09/1/16 கொண்ட உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 6 இல் காணப்பட்டுள்ளவாறு சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து பாதைகளையும் இனங்கண்டு உரிய முறையில் பட்டியல் இடப்பட்டு பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபைக்கு சொந்தமான அனைத்து பாதைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நீண்ட காலத்திற்கு முன்னர் சபைக்கு கிடைத்திருந்த கைடிரட்டர் மற்றும் டிலேர் (அதிகாரம் 203) மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் பிரிவு 2(1) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 2014 திசெம்பர் வரை பதிவு செய்யப்படாமல் ஓட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

(ஈ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் பிரகாரம் சபையினால் சேகரிக்கப்படும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் நூற்றிற்கு 10 இற்கான முத்திரை வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது சபையினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 845,940 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் மீது ரூபா 84,594 இற்கான முத்திரைக் கட்டணம் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(உ) 2004 ஜனவரி 26 திகதிய தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவை சபையின் அறிவுரை சுற்று நிருப இலக்கம் 2004/பி.ச/01 இன் பிரகாரம் சபையினால் பேணப்படும் நூலகங்களுக்குரிய புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் ஏனைய நூலக பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவ்வாறு கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான 06 வாகனங்கள் மற்றும் 02 டிரக்டர் டேலர்கள் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டதுடன், அவ் வாகனங்களை திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றி சபைக்கு வருமானம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------------

முன்னைய ஆண்டுகளின் போது குளங்கள் நிர்மாணிக்கும் செயற்திட்டங்கள் அமுல் நடத்தும் போது மற்றும் 2012 ஆண்டில் இறைச்சிக் கடை வாடகைக்கு கொடுத்த போது பிரதேச சபை முறைசார் விதமாக நடக்காமையால் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் தொடர்பாக ரூபா 218,015 இற்கான சட்ட வரைஞர் கட்டணம் செலவிடப்பட்டிருந்ததுடன், அனுராதபுர உச்ச நீதிமன்றத்தினால் வழக்கு தீர்ப்பு ஒன்றின் பிரகாரம் அநியாயம் இழைக்கப்பட்டோருக்காக ரூபா 325,176 தொகை ஒன்று செலுத்த நேரிட்டுள்ளது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்